IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.14/2025

Deposition of Witness for P.W.2

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.அல்தாப் பாஷா |
| OCCUPATION | - | இரண்டாம் நிலை காவலர், தெற்கு காவல் நிலைய குற்றப் பிரிவு |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.03.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

முதல் விசாரணை-

நான் தற்போது வேலூர் தெற்கு காவல் நிலைய குற்றப் பிரிவில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 21.07.2023 அன்று 13.30 மணிக்கு காட்பாடி வட்டம் காவல் ஆய்வாளருக்கு தகவல் கிடைக்கப்பெற்றது. அவருடைய உத்தவின் பேரில் நான் காவல் உதவி ஆய்வாளர் ஆதர்ஷ், சிறப்பு உதவி ஆய்வாளர் கணேசன் மற்றும் இளங்கோவன், காவலர் சீமான் அனைவரும் சேர்ந்து காங்கயநல்லூரிலுள்ள சத்யா lodge க்கு போய் இரண்டாம் தளத்திலுள்ள அறையில் 206 ல் பார்த்தபோது 5 நபர்கள் இருந்தார்கள். அந்த 5 நபர்களில் ஆஜர் எதிரிகள் 4 நபர்கள் இருந்தார்கள். ஆய்வாளர் அவர்களை விசாரித்தார் அவர்கள் அவருடைய பெயர் மற்றும் முகவரியை சொன்னார்கள். காவல் ஆய்வாளர் பெயர் முகவரியை விசாரித்துவிட்டு அவர்களுடைய வீட்டிற்கு தகவல் சொன்னார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை-

காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில் தான் நானும் ஆதார்ஷ்ம் lodge க்கு போனோம். Lodge க்கு 02.00 மணிக்கு போனோம் எப்போது திரும்ப வந்தோம் என்று நினைவில்லை. ஆய்வாளர் lodge ல் வேலை செய்பவர்களின் முன்பு விசாரிக்கவில்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 06.03.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.03.06 18:15:08 +0600

Additional District Judge(FTC),
Vellore